**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.38/2020
Prosecution witness. 7

| | |
|---|---|
| பெயர் : லோகநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2024.

18.11.2024

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் எதுவும் என்னுடையது இல்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 03.05.2019 ம் தேதி மதியம் 16.00 மணியளவில் நானும், பாலமுருகன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது கீழத்தூவல் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.38/2020
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : லட்சுமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2024.

18.11.2024

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். 2019 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. அ.சா.1 இராமசாமிக்கு நான் பெரியப்பா மகள். 1ம் எதிரி ராமமூர்த்திக்கும், இராமசாமிக்கும் சண்டை நடந்தது. நான் விலக்க சென்றேன். அப்போது 2ம் எதிரி கிருஷ்ணன் எனது தலையில் கம்பியை வைத்து அடித்துவிட்டார். நான் உடனே தூவலில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு சிகிச்சைக்கு சென்றேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 ராமசாமிக்கும் அ.சா.2 பூர்ணவள்ளிக்கும் இடையே அடிக்கடி குடும்ப பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். நான் பிரச்சனை முடிந்த பின்புதான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். யார் யாரை தாக்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் 2ம் எதிரி கிருஷ்ணன் மட்டும்தான் என்னை அடித்தார் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.1 இராமமூர்த்தி கொடுத்த பொய் புகார்க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

CC.No.38/2020
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : செல்வி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2024.

<u>18.11.2024</u>

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** கடந்த 29.04.2017 ம் தேதி இரவு சுமார் 09.45 மணியளவில் 1ம் எதிரி ராமமூர்த்தி, 2ம் எதிரி கிருஷ்ணன், 3ம் எதிரி காளிஸ்வரி ஆகியோர் எனது அண்ணன் அ.சா.1 ராமசாமி வீட்டின் முன்பு சுன்னி மகனே என்று அசிங்கமாக திட்டினார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியப்பா மகள் லட்சுமியையும் 1ம் எதிரி ராமமூர்த்தி கையில் வைத்திருந்த கம்பால் தலையில் அடித்து இரத்தகாயம் எற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி ராமமூர்த்தி, 2ம் எதிரி கிருஷ்ணன், 3ம் எதிரி காளிஸ்வரி எனது அண்ணன் அ.சா.1 ராமமூர்த்தியை அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) கீழத்தூவல் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் செய்துகொண்ட சமாதானத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.